# WORLD ELEPHANT DAY



**Forest officials feed fruits to elephants at Nandankanan Zoological Park in Bhubaneswar, on Monday**

P9-11 DT 13/08/15

DT NEXT

# Singapore bans sale of ivory

**Singapore:** Singapore said on Monday it will impose a blanket ban on the domestic sale of elephant ivory and products from 2021 as the government tightens its campaign against illegal wildlife trade. The announcement on World Elephant Day followed two years of consultations with non-government groups, ivory retailers and the public.

Authorities in the city-state made their largest ever seizure of smuggled ivory in July, impounding nearly nine tonnes of contraband tusks from an estimated 300 African elephants valued at $12.9 million. The illegal cargo was discovered in a container from Democratic Republic of the Congo being shipped to Vietnam via Singapore and also included a huge stash of pangolin scales.

DECCAN CHRONICLE



# SHOWER TIME

Two elephants enjoy a shower at Vandalur Zoological Park in Chennai, on Monday. The World Elephant Day is celebrated on August 12 | R SATISH BABU

THE NEW INDIAN EXPRESS

THE NEW INDIAN EXPRESS

P9 2 dt 12/08/19

# Forest dept has cleared Perur project: TNSCB

**CHENNAI: Even as the Madras High Court is seized of a plea moved by Vellingiri Hill Tribal Protection Society seeking to restrain the Tamil Nadu Slum Clearance Board (TNSCB) form constructing any houses in villages in Perur Taluk in Coimbatore district which are notified as hill area villages, TNSCB has submitted the no objection certificate (NOC) offered by the forest department.**

But interestingly the NOC categorically states that the forest department can't be held responsible for any damage to human life and properties caused by wildlife. The NOC further states that in the event of any such mishap no compensation will be paid by the forest department. The NOC granted pertains residential building in Perur Chettipalayam villages over a built-up area of 93,016 square metre. Similarly, in the NOC granted for construction of houses in Alanthurai village for an area of 20,936 square metre, the forest department has stated that since the area is located nearby Boluvampatti reserved forest, which is known for its wildlife diversity, elephants, panthers and other wild animals frequently stray out from the reserved forests to neighbouring patta lands. The NOC also very clearly stated that there are possibilities of man-animal conflict if the project is completed and people are settled.

The division bench comprising Justice S Manikumar and Justice Subramonium Prasad before whom the NOC's were filed recorded the same and adjourned the case for further hearing. The Vellingiri Hill Tribal Protection Society represented by its president V Loganathan had contended that TNSCB under the 'Home for Everyone Scheme' is planning to construct 600 residences in Alanthurai-Kalimangalam, 1,540 houses near the forest in Thenkarai Village, 2,500 houses near the hill area in Chettipalayam village in Perur and 70 houses for tribals in Pachana Vayal area in Alanthurai village. But all the said three villages-Alanthurai, Tenkarai and Perur Chettipalayam come under the Hill area Conservation Authority.

The plea on citing that already in the villages coming under the Hill Area Conservation Authority many unauthorised constructions and large scale projects near the hills has led to elephants coming into the residential areas and causing large number of deaths and loss to crops, submitted that under these circumstances it is highly dangerous for the government itself to undertake such large unauthorised constructions without any approval and proper impact assessments about elephant habitats.

DT NEXT

-Pg-5 DT 13/08/19

# Govt mulls promotion of eco-tourism at Sirumalai Hills: Forest Minister

**MADURAI: Efforts are made by the state government to promote eco-tourism in Sirumalai Hills in Dindigul district, according to Forest Minister Dindigul C Sreenivasan.**

A proposal has been sent to create a 'Biodiversity Park' in Sirumalai on a sprawling 120 acres of land at an estimated cost of Rs 5 crore, Forest Minister said after inspecting the site, where the park is set to come.

The Minister along with Dindigul Collector M Vijayalakshmi and officials from the Forest Department inspected the site on Monday. The proposed move is aimed at conserving natural resources in the hilly areas and also to inculcate cultural, educational and biodiversity values among the public, the Minister said.



**Forest Minister Dindigul C Sreenivasan inspecting the proposed site for the park in Sirumalai on Monday**

The Sirumalai hills, considered to be spur of Eastern Ghats, in Dindigul district, have forest cover with an extent of over 60,000 acres. The hill is undulating in nature with few plateaus and found located at an elevation of 400 to1650 meters from sea level. The hills were located about 25 kilometers from Dindigul town harbouring about 895 species belonging to 536 genera of higher plants with repository of several rare and endemic plants.

Citing the natural species in the hills, the Minister said that Sirumalai has recently been gaining huge tourism potentials owing to its salubrious weather, scenic beauty and places of interest. Hence, it was imperative that people who visit the hills sensitized to aid in sustainable management of available natural resources in this ecological sensitive area, the Minister said.

Further, the Minister said that the road to access the proposed park would be developed for 7.4 km at an estimated cost of Rs 2 crore. Besides, infrastructure facilities to accommodate tourists, tourist guide, interpretation centre and transport arrangements would be made, he said.

Pg. 2 of 13/08/18

DT NEXT

# Assam villagers feed elephants to keep them at bay

## *They grow paddy and grass for jumbos that venture close to human habitations*

RAHUL KARMAKAR
GUWAHATI

A cluster of villages in central Assam's Nagaon district has found a way of keeping crop-raiding elephants off their crops – by setting aside land to create a meal zone for them.

Most farmers of 12 villages in the Ronghang-Hatikhuli area of central Assam's Nagaon district do not have enough land to sustain their families. But they donated 203 *bighas* (roughly 33 hectares) of community land and took turns to plant paddy exclusively for the elephants that often come down the hills of the adjoining Karbi Anglong district.

The "jumbo *kheti*" (cropland) has been envisaged as the last line of mealy defence against some 350-400 elephants that have often paid for venturing too close to human habitations. Five of them were electrocuted by illegal electric fences in the last 16 months, while half-a-dozen, injured by spears and arrows, died in the jungles up the hills.



**Drawing the line:** The locals have planted 2,000 elephant apple, 1,500 jackfruit and 25,000 banana saplings.

About 10 km from the paddy field, toward the hills, is an 8-hectare plantation of Napier grass that 35 reformed hunters have grown for the elephants.

This plantation is on land belonging to a tea estate. The locals have also planted saplings of 2,000 *outenga* (elephant apple), 1,500 jackfruit and 25,000 banana trees on barren land between the paddy field and the grass plantation.

The three-step plantation has a common thread – environmentalist Binod Dulu Bora and the NGO 'Hatibondhu', meaning 'friends of elephants', he is associated with. "Growing paddy for elephants was the idea of Pradip Kumar Bhuyan, the director of our NGO. We had several meetings with the villagers and convinced them that they would be setting an example for the world to follow towards reducing man-animal conflicts," Mr. Bora told *The Hindu* on Monday.

Pg. 1 dt 12/08/14 THE HINDU

# INDIA SEES ALARMING FALL IN WILD JUMBO POPULATION

DC CORRESPONDENT
BENGALURU, AUG 12

With forests being encroached in the name of infrastructure development, the intimate connection between the wildlife and diverse eco-system is constantly being disturbed.

The deep wildlife crisis in the country is illustrated by the current situation of Asian elephants.

Elephants enjoy the highest status of Schedule I species in the Wildlife Protection Act of India, 1972, but unfortunately the situation on the ground is completely different.

"It is disappointing that today, only about 27,000 wild elephants live in the country, as against a million a decade ago, which is a 98% fall in the population. India is home to over 50% of Asian elephants in the world, making it the last s tronghold of these majestic creatures. They face the threat of shrinking forest ranges, habitat defragmentation, poaching, captivity, and anthropogenic pressure," claimed Mr Kartick Satyanarayan, co-founder, Wildlife SOS, which started working with elephants in 2010 to save the elephants from being subjected to severe abuse and cruelty by their captors.

"Captivity of elephants is associated with the cultural history of India and is accepted. But it masks the sad reality of illegal live elephant trade across the country. Captive elephants are found to be suffering from health issues, like foot rot, arthritis and compromised nutrition. These elephants are worked to the point of exertion and once their health problems hinder their movement, they are disposed of," he said.



**Elephants face threat such as shrinkage of their forest ranges, habitat defragmentation, poaching, captivity and anthropogenic pressure.**

According to a census carried out in 2018 by Project Elephant, there were 2,454 captive elephants in the country. This number is likely to decrease as elephants will subsequently age and the Wildlife Protection Act, 1972 forbids the capture of new calves for captivity.

Access to veterinary aid is a rarity, and the Wildlife SOS has been bringing critical medical aid to distressed elephants through its mobile veterinary unit. The NGO takes care of both wild and captive elephants in Karnataka, Maharashtra, Uttar Pradesh, Uttarakhand and Kerala.

"Often, simple injuries become chronic because of untimely or absence of treatment. Especially foot injuries have the tendency of becoming fatal to elephants. It is imperative to improve the condition of these elephants. We have been engaging with elephant keepers in different states to sensitise them about humane management of elephants," he said.

Pg. 2 dt 13/08/19

DECCAN CHRONICLE

# வண்டலூர் பூங்காவில் யானைகள் தினம் விமரிசை



யானைகள் தினமான நேற்று, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் யானைகளை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.

**தாம்பரம், ஆக. 13–**

வண்டலூர் உயிரியல் பூங்காவில், நேற்று, உலக யானைகள் தினம் கொண்டாடப்பட்டது.

உலக யானைகள் தினத்தையொட்டி, வண்டலூர் உயிரியல் பூங்காவில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த, 200க்கும் மேற்பட்ட, மாணவ மாணவியருக்கு, சமீபத்தில் ஓவியம், பேச்சு உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடந்தன.

வெற்றி பெற்றோருக்கு, நேற்று, பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அதேபோல், கால்நடை மருத்துவ பயிற்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு, யானைகளை பாதுகாப்பதின் அவசியம் குறித்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தி.14.ஆ. 13/08/15

# வீட்டின் மேற்கூரையில் தஞ்சமடைந்த முதலை



கர்நாடக மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளத்தின் கோர தாண்டவத்தில் பெலகாவி மாவட்டத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் 400-க்கும் மேற்பட்ட கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணா ஆற்றில் ஏற் பட்டுள்ள வெள்ள பெருக்கால் கடந்த சில நாட்களுக்கு முன்பு முதலை, பாம்புகள் ஊருக்குள் புகுந்தன. இந்த நிலை யில் பெலகாவி மாவட்டம் ராய்பாக்கில் ஊருக்குள் புகுந்த முதலை ஒரு வீட்டின் சிமெண்ட் மேற்கூரை மீது தஞ்சமடைந் திருந்தது. இதை பார்த்த அந்தப் பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

தின தந்தி

13/08/19

### வெள்ளியங்கிரி மலையில் வீடுகள் கட்ட திட்டம்:

# விலங்குகளால் உயிரிழப்பு ஏற்பட்டால் வனத்துறை பொறுப்பு ஏற்காது

## ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல்

சென்னை, ஆக.13– வெள்ளியங்கிரி வனப் பகுதியில் குடிசைமாற்று வாரியம் வீடுகள் கட்டும் இடத்தில் யானை, சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாட்டம் உள்ளது என்றும், வன விலங்குகளால் மனித உயிர் பலியானால், அதற்கு பொறுப்பு ஏற்க முடியாது என்றும் சென்னை ஐகோர்ட்டில் வனத்துறை சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### பட்டா வழங்க திட்டம்

வெள்ளியங்கிரி மலைவாழ் மக்கள் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் வி.லோகநாதன். இவர், சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சார்பில், அனைவருக்கும் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வெள்ளியங்கிரி மலையில் உள்ள ஆலந்துறை களிமங்கலம் பகுதியில் 600 வீடுகளும், தென்கரை கிராமத்தில் 1,500 வீடுகளும், பேரூர் செட்டிப்பாளையம் கிராமத்தில் 2,500 வீடுகளும், பச்சன வயல் கிராமத்தில் 70 வீடுகளும் கட்டுவதற்கான கட்டுமான பணிகள் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே வனப்பகுதியை ஆக்கிரமித்து கட்டுமானங்களை அதிக அளவில் கட்டிவருவதால் யானைகள் அடிக்கடி எங்களது குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து விளைபயிர்களையும், வீடுகளையும் நாசம் செய்து வருகிறது. சிறுத்தைகளும் அவ்வப்போது இங்கு வந்து ஆடு, மாடுகளை வேட்டையாடி செல்கிறது.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை கட்டிவிட்டால் அதை வைத்தே வனப்பகுதியை முழுமையாக ஆக்கிரமிக்கவும், ஏற்கனவே ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு எளிதாக பட்டா உள்ளிட்ட பிற அனுமதிகளை வழங்குவதற்காக இதுபோன்ற திட்டம் அமல்படுத்தப்படுகிறது. எனவே இதற்கு தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

### விலங்குகள் நடமாட்டம்

இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு, இதற்கு பதில் அளிக்க உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.மணிக்குமார், சுப்பிரமணியம் பிரசாத் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, திட்டத்துக்கு தமிழக வனத்துறை வழங்கியுள்ள தடையில்லா சான்றிதழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த தடையில்லா சான்றில் வித்தியாசமான நிபந்தனைகளை வனத்துறைவிதித்து இருந்தது.

அதில் கூறியிருப்பதாவது:–

ஆலந்துறை, செட்டிப்பாளையம் உள்ளிட்ட வனப்பகுதிகளில் சுமார் 29 ஆயிரம் சதுர மீட்டருக்கு கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன. இந்த பகுதிகளில் விலங்குகளின் நடமாட்டம் உள்ளது. இந்த பகுதிகளில் வீடு கட்டினால், மனிதர்கள்–விலங்குகள் மோதல் நடைபெற வாய்ப்புள்ளது. எனவே கீழ்கண்ட நிபந்தனைகளுடன், தடையில்லா சான்று வழங்கப்படுகிறது.

### அகழி அமைக்க வேண்டும்

இந்த பகுதிகளில் யானைகளுக்கு பிடித்தமான பயிர்களை வளர்ப்பதை தவிர்க்க வேண்டும். குடியிருப்புகளுக்குள் யானை வருவதை தடுக்க, அந்த குடியிருப்பை சுற்றி அகழி அமைக்க வேண்டும். வனவிலங்குகளின் நடமாட்டத்தை தெரிந்துகொள்ள கேமரா உள்ளிட்ட முன்னெச்சரிக்கை உபகரணங்களை இப்பகுதிகளில் பொருத்த வேண்டும்.

குடியிருப்புகளை சுற்றி மதில் சுவர்கள் கட்டப்பட வேண்டும். குடியிருப்பு பகுதிகளுக்குள் யானைகள் வந்தால், அதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். பொதுமக்கள் யானைகளை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. வனவிலங்கு நடமாட்டத்தை தடுக்கும் விதமான தடைகளை ஏற்படுத்தக்கூடாது. இயற்கையான நீரோடைகளை தடுக்கக்கூடாது.

### பொறுப்பு ஏற்காது

யானை உள்ளிட்ட வனவிலங்குகளினால் கட்டிடங்கள் சேதம் அடைந்தாலோ, மனித உயிர் பலிகள் ஏற்பட்டாலோ அதற்கு வனத்துறை பொறுப்பு ஏற்காது. பாதிக்கப்பட்டவர்கள் வனத்துறையினரிடம் இழப்பீடு எதுவும் கேட்கக்கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை படித்து பார்த்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை வேறுதேதிக்கு தள்ளிவைத்தனர்.

"பொதுவாக ஒரு திட்டத்தினால், எந்த பாதிப்பும் இல்லை என்றால் மட்டுமே தடையில்லா சான்றுகள் வழங்கப்படும். ஆனால், பாதிப்பு இருக்கும், அதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்ற வித்தியாசமான நிபந்தனைகளுடன், தமிழக வனத்துறையினர் தடையில்லா சான்று அளித்திருப்பது ஆச்சரியமாக உள்ளது" என்று மனுதாரர் தரப்பு வக்கீல் எம்.புருஷோத்தமன் கூறினார்.

நமது அம்மா

செவ்வாய், ஆகஸ்ட் 13, 2019

# சிறுமலையை சுற்றுலாத்தலமாக மேம்படுத்த துரித நடவடிக்கை

## அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் தகவல்

திண்டுக்கல், ஆக. 13-

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை பகுதியை சுற்றுலாத்தலமாக மேம்படுத்துவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், சிறுமலையில் பல்லுயிர்ப்பூங்கா அமைப்பதற்கான பகுதியை நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மு.விஜயலட்சுமி முன்னிலையில், வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ திண்டுக்கல் மாவட்டம், சிறுமலையில் பல்லுயிர்ப்பூங்கா அமைப்பதற்கான பகுதியை வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் நேற்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.விஜயலட்சுமி, வேடசந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.பி.பி.பரமசிவம், முன்னாள் மேயர் வி.மருதராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பா.வேலு , தலைமை வனப்பாதுகாவலர் திருநாவுக்கரசு, மாவட்ட வன அலுவலர்கள் கொடைக்கானல் தேஜஸ்வி, கரூர் அன்பு ஆகியோர் உள்ளனர்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள கொடைக்கானல் மலைக்கு அருகில் சிறுமலை உள்ளது. சிறுமலையில் வளமான பல்லுயிர் வகை காடுகளும், அதே நேரத்தில் நடுமலைப் பகுதியில் வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகளும் அமைந்துள்ளன. இங்கு வளர்ந்துவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் காப்பித் தோட்டங்கள், பழத்தோட்டங்கள், பல காய்கறி பயிர்கள் பயிரிடுதல் ஆகியவற்றின் விளைவாக சிறுமலையில் உள்ள அரிய வகை தாவரங்களும் அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளன. சிறுமலையின் தாவரங்கள் கணக்கெடுப்பு ஆய்வின்படி தென்னிந்தியாவில் உள்ள தாவர வகைகளில் 536 உயிர் தாவரங்களையும், 895 சிற்றினங்களையும் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

சிறுமலை மலைப்பகுதியின் காட்டு எருமை, செந்நாய், மான், கேளையாடு, கரடி, முள்ளம்பன்றி, நரி, குரங்கு, சாம்பல் அணில், கீரி, பாம்பு, ஆந்தை, கழுகு, பட்டாம்பூச்சிகள் போன்ற உயிரினங்களும், தனக்கு, உசில், மருத மரம் என பல்லுயிர் பெருகி கிடக்கும் பசுஞ்சோலை சிறுமலைக்காடாகும். மேலும் சிறுமலையின் சீதோசன நிலையும் மற்றும் பசுமை நிறைந்த புல்வெளிகளும் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவருவதாக உள்ளது. மேலும் சிறுமலை பகுதி பல்வேறு மருத்துவ மூலிகைகளையும், அரிய வகை மற்றும் அழிந்து வரும் மரங்களையும் உள்ளடக்கிய பகுதி என்பதால், இங்கு பல்லுயிர் பெருக்க பூங்கா அமைவதற்கு ஏதுவான இடமாகும்.

வளர்ந்து வரும் நகரங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் இழந்த பன்முகத்தன்மையை மீட்டெடுக்கும் விதமாக அரிதான மற்றும் அழிவின் தருவாயில் உள்ள உயிரினங்கள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் வகையில் முதலமைச்சர், சிறுமலையில் 120 ஏக்கர் பரப்பளவில் ரூ.5 கோடி திட்டமதிப்பீட்டில் பல்லுயிர்ப்பூங்கா அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டார். சிறுமலையில் பல்லுயிர்ப்பூங்கா அமைவதன் மூலமாக, அரியவகை மூலிகை தாவரங்களையும், அரிய வகை மரங்களை பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படவும், அவற்றின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தவும் வாய்ப்பாக இருக்கும்.

இப்பூங்காவில் மூங்கில் பூங்கா, ஆர்க்கிடோரியம் பூங்கா, பட்டாம்பூச்சி பூங்கா மற்றும் சிறுவர், சிறுமியருக்கான விளையாட்டு பூங்கா, பல்லுயிர் பெருக்கத்தின் அவசியத்தை விளக்கும் வண்ணம் பல்வேறு வசதிகளுடன் கூடிய பார்வையாளர் தகவல் மையம் அமைத்தல், கள்ளிச்செடி தோட்டம், பனைப்பூங்கா போன்ற பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடங்கியதாக அமைப்பதன் மூலம் இயற்கை வளத்தினை பாதுகாப்பதின் அவசியத்தை அறியவும், வனத்தினை பற்றிய கல்வி அறிவினையும் மக்களுக்கு வழங்குவதற்கும், சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு குழுக்கள் அமைத்து அதன் மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் ஒரு வாய்ப்பாக அமையும்.

சுற்றுலாப்பயணிகளின் வசதிக்கேற்ப தங்கும் விடுதி அமைத்தல், உணவகங்கள், இப்பகுதியில் சுற்றுலா இடங்கள் குறித்து சுற்றுலாப்பயணிகளுக்கு விளக்குவதற்கென சுற்றுலா வழிகாட்டிகள் நியமித்தல், பேருந்து வசதிகள் போன்றவைகளை ஏற்படுத்தி சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சிறுமலை ஊராட்சியில் இருந்து பல்லுயிர்ப்பூங்கா அமைப்பதற்கென தேர்வு செய்யப்பட்டுள்ள பகுதி வரை உள்ள 7.4 கி.மீ. தூரத்திற்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு வசதிகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோன்று, சிறுமலை பகுதியை சுற்றுலாத்தலமாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சிறுமலை பகுதியில் பொது மக்களின் தேவைகள் மற்றும் அடிப்படை வசதிகள், கோரிக்கைகள் குறித்து வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வி.பி.பி.பரமசிவம், முன்னாள் மேயர் வி.மருதராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பா.வேலு மற்றும் தலைமை வனப்பாதுகாவலர் திருநாவுக்கரசு, மாவட்ட வன அலுவலர்கள் தேஜஸ்வி, (கொடைக்கானல்), அன்பு (கரூர்) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.